முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1203

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.01.2023, சனிக்கிழமை

1. பிரணவ சக்திமிகு அரங்கா வாழ்க
   பிரணவக்குடில் படைத்த தேசிகா வாழ்க
   சரவணச்சுடரேற்றி கலியுகத்தை
   சகலருக்கும் ஞான யுகமாக மாற்ற வந்த
2. வந்தநல் அரங்கனே ஞானியே
   வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   சிந்தைபட ஞான அறிவுரை ஆசி
   செப்பிடுவேன் சுபகிருது சிலை திங்கள் தன்னில்
   (சுபகிருது வருடம் மார்கழி மாதம் 30 ம் நாள் 14.01.2023, சனிக்கிழமை)
3. தன்னிலே அரங்கன் பலம் உலகமறிய
   தரணியில் அற்புதம் உலகமாற்றமாக
   ஆகவே சடுதி நிகழக்கூடும்
   அற்புதத்தை நடத்தும் அரங்கன் மார்க்கமே
4. அகிலத்தை மாற்றும் உயர் மார்க்கமாகும்
   ஏற்புகொண்டு உலகோர் ஓங்காரக்குடிலோடு இணைந்தால்
   இந்த உலகத்தை மாற்றி
   ஞான ஆட்சிக்காலம் உருவாக்க நேரும்
5. நேர்மைகொண்டு அரங்கன் தொண்டர்படைகளாக
   நிலவுலகில் எங்கும் மக்கள் படை மாற
   மாறவே கலியுகத்தில் சர்வதடைகளும் அகன்றோடி
   கருணைமிக்க அரங்கன் தொண்டாலே தயவாலே
6. பேருலகம் ஞான உலகமாக மாற்றம் பெறும்
   பிரம்ம சூட்சும சகல ரகசியங்களும் மனிதர்களுக்கு விளங்கி
   விளங்கியே அவரவரும் ஞானியாக
   விளம்பிடுவேன் மாற்றங்கள் அடைய நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–